DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No. 208/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | Pw 1 | Caste | : | |
| Name | : | ஜெரோம் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 14th day of December 2022.
14.12.2022.

குறுக்கு விசாரணை

**1.** நான் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல்செய்வதற்கு மாவட்ட கல்வி அதிகாரியிடம் முறையாக அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். எந்த தேதி, எந்த மாதம் அனுமதி வாங்கினேன் என்றால் வாய்மொழியாக அனுமதி வாங்கினேன். நானும், வாய்மொழியாகதான் அனுமதி கேட்டேன். நான் வாய்மொழியாக அனுமதி கேட்டு வாய்மொழியத்தான் எனக்கு AEO அனுமதிகொடுத்தார் என்று புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. சாதாரணமாக தற்செயல் விடுப்பு, சிறு விடுப்பு, EL ஆகியவை தலைமை ஆசிரியரிடம் மனு கொடுத்துதான் பெறவேண்டும் என்றால் சரிதான். இந்த தனிப்புகாரை தாக்கல்செய்தவற்கு தலைமை ஆசிரியரிடம் அனுமதிபெற்றேனா என்றால் இல்லை அவர்களுக்கு தெரியும். நான் அரசு பள்ளியில் ஆசிரியிராக பணிபுரிகிறேன் என்றால் சரிதான்.

2. நான் இந்த தனிப்புகார் மனுவை தாக்கல்செய்தவற்கு வாய்மொழியாக அனுமதி கொடுத்த AEO வின் பெயர் என்ன என்றால் ஜோசப் அந்தோணி ஆவார். அரசு ஊழியர் தனக்கு சொந்தமான சொத்தை கிரையம் பெறவேண்டும் என்றாலும் இதேபோல் வழக்கு பதிவு செய்வதற்கும் அனுமதி வாங்கவேண்டும் என்றால் வாங்கவேண்டும். எனது மனைவி பெயர் ஜெய்சி ஜெரட். எனக்கு 12.09.2012-ம் தேதி திருமணம் நடந்தது.திருமணம் முடிந்து 3 மாதம் சேர்ந்து வாழ்ந்தோம். எனது மனைவி என்மீது துன்புறுத்தியதாக இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு விடுதலை ஆகிவிட்டது. அந்த வழக்கின் எண். என்ன என்றால் CC.165/2014 ஆகும். குற்ற எண் எனக்கு தெரியாது. அது 08/2013 ஆகும். இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட காலத்தில் அந்த விபரம் தினசரி நாளிதழில் பிரசுரம் ஆனது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் தினசரி நாளிதழில் உள்ள செய்தி அந்த செய்தி என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ-1 ஆகும்.CC.165/2014 வழக்கில் சமாதானம் ஆகிவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் 06.10.2022-ம் தேதி தீர்ப்பானது. இந்த தனிபுகார் வழக்கு தாக்கல் செய்யும் போது அந்த CC.165/2014 வழக்கு முடிவுக்கு வரவில்லை என்றால் சரிதான். அந்த CC.165/2014 வழக்கு நிலுவையில் இருந்த போது வழக்கிற்கு அனுமதி வாங்கினீர்களா என்றால் என் மீது போடப்பட்டதால் அனுமதி தேவையில்லை.AEO விடம் என் மீது CC.165/2014 வழக்கு பதிவு செய்யபபட்டுள்ளது என்று எழுத்துமூலமாக தகவல் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த அனுமதி கடிதத்தை இந்த தனிபுகார் மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ-3 ஆவணமானது உதவி தொடக்க கல்வி அலுவலருக்கு தலைமை ஆசிரியர் மூலமாக கொடுக்கப்பட்ட விளக்கக்கடிதம் என்றால் சரிதான். அதில் 4 வது பாராவில் என் மீது வழக்கு தொடுத்தவர் சமாதானம் செய்து கொண்டு வழக்கை வாபஸ் பெற்று சமாதானத்தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது விவாகரத்து வழக்காகும். அதில் பொருள் என்ற காலத்தில் குற்ற எண்.08/2013 வழக்கு சம்பந்தமாக பதில் சமர்பிக்கிறேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது விவாகரத்து வழக்கில் சமாதானம் ஆகிவிட்டதால் குற்ற எண்.08/2013 ல் சமாதானமாக போவதாக சொல்லப்பட்டதால் அப்படி சொல்லப்பட்டது. அதில் நான் அனுப்பிய 1 வது பதிலில் மேற்படி குற்ற எண். 08/2013 பொய்யான வழக்கு என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.நான் AEO விற்கு கொடுத்த பதில் அனைத்து பொய்யான தகவலை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.CC.165/2014 வழக்கு சமாதானமாகிவிட்டது என பொய்யான தகவல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இராமேஸ்வரம் ரோடு பள்ளியில் எத்தனை வருடமாக வேலை செய்கிறேன் என்றால் 2013 முதல் வேலை செய்கிறேன். நான் பணியில் சேரும் போத தலைமை ஆசிரியர் பெயர் என்ன என்றால் எல்லசன்ட் ஜெயா. நான் இந்த தனி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு யார் தலைமை ஆசிரியராக இருந்தார் திருமதி. பிரான்சிஸ் மேரி இருந்தார்.

4. ஏற்கனவே எனது தரப்பில் சாட்சியம் அளித்துள்ள ஜலீலா என்பவர் அந்த பள்ளியில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் அப்போது தங்கச்சிமடத்தில் வீடு பிடித்து குடியிருந்து வந்தார் என்றால் பொய்யான தகவல். தற்போது ஜலீலா எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் இராமநாதபுரத்தில வசித்து வருகிறார். அவர் கணவருடன் சேர்ந்து வாழ்கிறார் என்றால் சரிதான். சேர்ந்து வாழ்ந்தார் தற்போது இறந்துவிட்டார். அவர் பள்ளியில் பணிபுரியும் காலத்திலேயே கணவரை விட்டு பிரிந்துவந்துவிட்டார் என்றால் பொய்யான தகவல் ஆகும்.

5.எதிர்மனுதாரர் நாகசுந்தரம் இந்த வழக்கில் நான் 17.07.2014-ம் தேதி பள்ளிக்கு வரவில்லை என்று புகார் யாருக்கு அனுப்பினார் என்றால் AEO விற்கு அனுப்பினார். எந்த தேதியிட்டு அனுப்பினார் என்று தெரியாது. அவர் பலமனுக்களை அனுப்பியுள்ளார். இறுதியாக கல்விதுறை இயக்குனருக்கு அனுப்பியுள்ளார். நான் அந்த மனுக்களை எல்லாம் நேரடியாக பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்துள்ளேன்.அந்த மனுக்களை நான் முறையாக AEO, DEO ஆகியோரிடம் இருந்து பெற்று இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல்செய்யும் போது பெறவில்லை அதன்பின்பு தான் தகவல் உரிமை சட்டப்படி பெற்றேன்.அதன்பிறகு அந்த மனுக்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். அந்த மனுக்களை AEO, DEO விடமிருந்து எந்த வருடம் வாங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கினேன்.

6.கடைசியாக நான் எப்போது இந்த நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியம் அளித்தேன் என்றால் 29.06.2017-ம் தேதி அளித்தேன். அப்போது முதல் விசாரணை சாட்சியம் அளிக்கும் போது அந்த AEO, DEO விடம்பெற்ற மனுக்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கைவசம் இருக்கிறது. வழக்கு சம்பந்தமாக எதிர்மனுதாரர் அனுப்பிய மனு, புகார் மனுவா அல்லது தகவல் அறியும் உரிமை சட்டம் படி அனுபப்பட்ட மனுவா என்றால் 3 முறை புகார் தான் அனுப்பியிருந்தார். தகவல் அறியும் உரிமை சட்டப்படியும் கேட்டிருந்தார் எனக்கு ஞாபகம் இல்லை. எதிர்மனுதாரர் முதன்மை கல்வி அலுவலருக்கு அனுப்பிய மனு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி அனுப்பியிருந்தார் என்றால் சரியல்ல. 1 க்கும் மேற்பட்ட மனுக்களை அனுப்பிவிட்டு AEO, DEO நடவடிக்கை எடுக்கவில்லை என்று இறுதியாக இயக்குனருக்கு புகார் மனு அனுப்பியிருந்தார். நான் மேற்படி சொல்லப்பட்ட மனுக்களை புகார் மனுவிலும், முதல் விசாரணையிலும் தாக்கல்செய்யவில்லை அந்த ஆவணங்களை உண்மை இல்லாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.என்னிடம் காட்டப்படும் Ecourt, daily status ஆவணத்தில் 17.07.2014-ம் தேதியிட்டு அதில் Accused A1 to A4 present. Await summon to service Lw1 to Lw3 call on 31.07.2014 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ.2 ஆகும். அன்று நான் ஆஜராகவில்லை மனுதாக்கல் செய்திருந்தேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**